இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கல்விப் பீடம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்ப கல்வித் துறை
கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக் கல்வி
இறுதிப் பரீட்சை

**EPU6230** – உள்ளடங்கற் கல்வி

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி : **11/03/2023** நேரம்: பி.ப 01.30 – பி.ப 03.30

# பகுதி I

1. உள்ளடங்கல் கல்வி என்பதன் கருத்து யாது? வரைவிலக்கணத்துடன் விளக்குக.
2. உள்ளடங்கல் கல்வியின் மூன்று (03) கோட்பாடுகளையும் சுருக்கமாக விளக்குக.
3. உள்ளடங்கல் கல்வியில் வளர்ந்துவரும் புதிய போக்குகளை விளக்குக.
4. விசேட தேவையுடைய பிள்ளைகளின் வித்தியாசமான வகைகளைப் பட்டியலிட்டு யார் விசேட கல்விக்கு தகுதியானவரென குறிப்பிட்டு விளக்குக.
5. மீத்திறனுள்ள குழந்தைகள் (gifted children) பிரகாசமான குழந்தைகள் (brighted children) ஆகிய பதங்களை வேறுபடுத்துக.
6. தழுவமைத்தல் (accommodation) மாற்றியமைத்தல் (modification) ஆகிய எண்ணக்கருக்களுக்கிடையேயான வேறுபாடுகளை விளக்குக.
7. வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் என்ற எண்ணக்கருவை சுருக்கமாக விபரிக்குக.
8. சலமன்கா யுனெஸ்கோ (Salamanca UNESCO) 1994 மாநாட்டின் சாதாரண வகுப்பறையில் விசேட தேவையுடையோருக்கான கல்வி பற்றி உமது கருத்துக்களைக் குறிப்பிடுக.

**(08x05=40** புள்ளிகள்)

## பகுதி – II

9.

i. ரமேஸ் மூன்றாந் தரத்தில் கல்வி பயிலும் மாணவன். அவனுக்கு வாசித்தலில் கற்றல் இடர்பாடு காணப்படுகின்றது. அவனால் அவனது வகுப்பு நூல்களை வாசிக்க முடியாது. ரமேஸின் வாசித்தல் பிரச்சினைகளை பட்டியலிடுக. (08 புள்ளிகள்)

ii. ஆரம்ப வகுப்பு ஆசிரியரென்ற வகையில் ரமேஸின் வாசித்தல் இடர்பாடுகளை இழிவாக்கவும் அவனது வாசிப்பை உயர்த்தவும் உமது சிபாரிசுகளை முன்மொழிக. உதாரணத்துடன் விளக்குக. (12 புள்ளிகள்)

10.

i. வகுப்பறையொன்றின் மாணவர் பல்வகைமை என்பதை உதாரணங்களுடன் விளக்குக. (08 புள்ளிகள்)

ii. நிர்மலா தரம் நான்கில் கல்வி பயிலும் மாணவி. அவளால் இலக்குகளில் கவனத்தைக் குவிக்க முடியும். ஆனால் பல சந்தர்ப்பங்களில் ஒதுக்கப்பட்ட நேரத்தில் அவற்றை பூர்த்திசெய்ய முடிவதில்லை. அவளால் பாடங்களைப் புரிந்துகொள்ள முடியும். ஆனால் பரீட்சைகளில் சிறப்பாக தோற்ற முடிவதில்லை. நிர்மலா தரத்திறன்கள் அவர் தரத்தை எட்டியிருப்பதை உறுதிசெய்ய ஒரு திறமையான ஆசிரியர் தேர்வில் என்ன தளுவலை பயன்படுத்தலாம்? (12 புள்ளிகள்)

11.

i. கலைத்திட்ட தளுவல் என்ற எண்ணக்கருவை விளக்குக. (08 புள்ளிகள்)

ii. கற்போரின் பல்வகைமைத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு **ஒன்பது** (09) வகையான கலைத்திட்ட தளுவல்களை எவ்வாறு பிரயோகம் செய்வீர்? (12 பள்ளிகள்)

12.

i. உங்களது வகுப்பில் குழுவாக இணைந்து கற்பித்தல் முறையினை எவ்வாறு பிரயோகிப்பீர் என்பதை விளக்கும் வகையில் ஓர் எண்ணக்கரு வரைபடத்தினை வரைக. (10 புள்ளிகள்)

ii. உங்களது கற்பித்தலிலும் மாணவர்களது அடைவிலும் குழுவாக இணைந்து கற்பித்தல் மாதிரிகள் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றனவென்பதை விபரிக்க. (10 புள்ளிகள்)

13.

i. உள்ளடங்கல் கல்வியினது பல்வேறு மாதிரிகளை பெயரிட்டு விளக்குக. (08 புள்ளிகள்)

ii. நீங்கள் மேலே குறிப்பிட்ட மாதிரிகளில் **நான்கினைத்** (04) தெரிவுசெய்து அவை உள்ளடங்கல் கல்வியில் செலுத்தும் செல்வாக்கை ஆராய்க. (12 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*